COPY

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I,

**Present : Thiru. K.R. Balaji B.A.,B.L.,(Hons).,**

Judicial Magistrate Court No.III
Judicial Magistrate Court No.I (FAC)
Tiruchirappalli.

**CC 886/2022**

Deposition of witness for Prosecution அ.சா. 1

Name : ரவிக்குமார்
Father Name : சுவாமிநாதன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :52/2023

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act of 1969 of the day of 06.07.2023.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

7) முதன் முதலாக கொரானா ஊரடங்கு அறிவித்த போது ஞாயிற்று கிழமை தோறும் மக்கள் வெளியே வரக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் இல்லை. மருத்துவ தேவைக்கு வெளியே வரலாம் என்று சொல்லப்பட்டிருந்தது. எதிரி என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி எந்த இடத்தில் பணியாற்றி வருகிறார் என்றால் BHEL நிறுவனத்தில் Account Section ல் பணியாற்றி வருகிறார். எதிரிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் எதிரிக்கு பணம் கொடுத்த போது சாட்சியாக உடன் யார் இருந்தார்கள் என்றால் எதிரி மட்டும் தான் இருந்தார்.

8) காசோாலையை கொடுக்கும் போது எதிரி மட்டும் தான் இருந்தார். நான் நடத்தி வரும் Syscat கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனத்தை அரசு அனுமதி பெற்று தான் நடத்தி வருகிறேன். எனக்கும் எதிரியின் கணவருக்கும் பண பரிவர்த்தனை உள்ளதா என்றால் உள்ளது. அவர் ரொக்கமாகவும் வங்கி மூலமாகவும் என்னிடமிருந்து ரூ. 65,000/- பணம் வாங்கினார். பிறகு அந்த பணத்தை திருப்பி கொடுத்து விட்டார். அந்த பணத்தை எப்போது திரும்ப கொடுத்தார் என்றால் நான் பணம் கொடுத்து சுமார் 6,7 மாதங்கள் கழித்து பணம் திரும்ப கொடுத்தார். நான் எதிரிக்கு என்ன ரூபாய் தாள்களாக கடன் கொடுத்தேன் என்றால் ரூ. 500/- கட்டுகளாக ரூ. 8,00,000/- ( எட்டு லட்சம் மட்டும் ) கொடுத்தேன்.

9) மேற்படி ரூ. 8,00,000/– ( எட்டு லட்சம்) தொகை எதிரி என்னிடம் கடன் வாங்குவதற்கு முன்னதாகவே அவரது கணவர் என்னிடம் ரூ. 65,000/– கடன் வாங்கி விட்டார். எதிரி என்னிடம் எந்த காலத்திலும் ரூ. 8,00,000/– கடன் வாங்கவில்லை என்றும் அந்த கடனுக்கு காசோலை எதுவும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. 2016 வருடம் முதல் 2018 வருடம் வரை எதிரியின் கணவர் என்னிடம் ரூ. 5,00,000/– வாங்கினார் என்றும் மேற்படி கடன் தொகைக்கு ஜாமீனாக அவரது மனைவியின் பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட காசோலையை வழங்கினார் என்றால் சரியல்ல. எதிரியின் கணவரிடம் நான் கடனுறுதி சீட்டு ஏதேனும் வாங்கினேனா என்றால் இல்லை. எதிரியின் கணவர் அவர் வாங்கிய ரூ. 5,00,000/– ல் ( ஐந்து லட்சத்தில்) ரூ. 4,00,000/– (நான்கு லட்சம் ) 2019 ம் ஆண்டே நேரில் ஆஜராகி கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல.

10) மேலும் பாக்கி தொகை ரூ. 1,00,000/– ( ஒரு லட்சம்) ஐ நான்கு தவணைகளாக 07.07.2020 , 16.09.2020, 31.03.2021 ஆகிய தேதிகளில் ரூ. 65,000/– ஐ மட்டும் செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி தொகையில் ரூ. 65,000/– ( அறுபத்தைந்தாயிரம்) G Pay மூலமாக செலுத்தினாரா என்றால் இல்லை. அவர் என்னிடம் வாங்கிய வேறொரு கடனுக்காக தான் மேற்படி ரூ. 65,000/– ஐ செலுத்தினார். எதிரியின் கணவர் எனக்கு ரூ. 35,000/– ( முப்பத்தைந்தாயிரம்) பாக்கி தொகை கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த ஒரு வரவு செலவு இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் கணவரிடமிருந்து ரூ. 35,000/–(முப்பத்தைந்தாயிரம்)தொகை வர வேண்டியிருப்பதால் எதிரியின் மீது பொய்யாக ரூ. 8,00,000/– காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court,
interpreted/Read over to the witness and admitted
by the deponent to be correct.

***Sd/ K.R. Balaji B.A.,B.L.,(Hons)***
Judicial Magistrate No.I(FAC),
Tiruchirappalli.

VERDICTUM.IN